மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எளிய முறையில் கற்பதற்கு என்று சொற்களை தேர்ந்தெடுத்துத் தான் பாடங்கள் அமைக்கப்படும். அது தனித் தமிழ் நோக்கத்திலே உருவாக வேண்டுமென்று கட்டாயம் இல்லை. தனித் தமிழ் என்பது கொஞ்சம் வளர்ந்தவர்களுக்குத் தானே தவிர, வளராதவர்களுக்குத் தனித் தமிழ்ச் சொற்கள் அந்தத் தெளிவை ஏற்படுத்தி விடும் என்று எதிர்பார்க்க முடியாது.

9–15 மணி

மீனம்பாக்கம் விமான தள அபிவிருத்தி

* 916—திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மீனம்பாக்கம் விமான தள அபிவிருத்திக்காக மீனம் பாக்கம் கிராமத்தை காலி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மீனம்பாக்கம் விமான தள அபிவிருத்திக்காக மீனம் பாக்கம் கிராமத்தில் 15—77—0 எக்டேர் நிலத்தினைக் கையகப்படுத்தித் தருமாறு, இந்திய சர்வதேச விமானப் போக்குவரத்துக் குழுமம் அரசைக் கேட்டுள்ளது. இப் பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொன்மை வாய்ந்த அந்தக் கிராமத்தை விமான தள அபிவிருத்திக்காக எடுத்துக் கொள்வதைப் பற்றி ஏற்கனவே பத்திரிகையிலே எல்லாம் அறிவிக்கப்பட்டதன் விளைவாக அந்த ஊரினுடைய சொத்துக்கள் மதிப்பிழந்து இருக்கின்ற காரணத்தால் ஒரு தெளிவான முடிவை இந்த அரசு அறிவிப்பதற்கு முன்னால், அப்படி விமான தளத்தினுடைய அபிவிருத்திக்காக எடுத்துக் கொள்ளும்போது, எந்த முறையில் அவர்களுக்கு ஈட்டுறுதி வழங்கப்பட இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, சர்வதேச விமான நிலையத்தை விரிவாக்கம் செய்வதற்கு, அதற்கு மிக அருகாமையிலே இருக்கக் கூடிய அந்த நிலம் தான் பொருத்தமானது என்று விமான தளத்தினுடைய அந்த சர்வதேசக் குழு தெரிவித்திருக்கிறது. அதேபோல இடம் பெயருகின்ற மக்களுக்கு தகுந்த மாற்று இடமும், அவர்கள் அனுபவித்து வந்த அத்தனை வசதிகளையும் அந்த மக்களுக்குச் செய்து தர வேண்டும் என்றும், நம்முடைய அரசின் சார்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. அந்தப் பகுதியிலே 96 குடிசை

களும், ஓடு மற்றும் தளம் அமைத்த 196 வீடுகளும் ஒரு விநாயகர் கோயிலும், பெருமாள் கோயிலும், குடிநீர்க் கிணறு, பஞ்சாயத்து அலுவலகம், பஞ்சாயத்து யூனியன் துவக்கப் பள்ளி, மற்றும் பாலவாடி மற்றும் உயர்நிலைப் பள்ளி போன்றவைகள் எல்லாம் அந்த கிராமத்திலே இருக்கின்றன. அதேபோல் பிரதான சாலையில் நிறைய கடைகளும் அங்கேயிருக்கின்றன. ஒட்டு மொத்தமாக அந்தக் கட்டிடங்களுடைய உத்தேச மதிப்பு சுமார் 2 கோடி ரூபாய் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே, தகுந்த வசதியான மாற்று ஏற்பாடுகளை விமான நிலையக் குழு செய்து கொடுப்பதற்கு முன்வருவார்களானால், அந்த இடங்களை அவர்களிடத்திலே ஒப்படைப்பது பற்றி அரசு முடிவு செய்யும்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : தலைவர் அவர்களே, அப்படி விமான தளத்திற்கு அந்த இடத்தை எடுத்துக் கொள்கிற போது, முழு அளவிற்கு அவர்களுக்கு மானியம் வழங்கினாலும் கூட, அந்த ஊரிலே இருக்கிற மக்கள் பல்வேறு இடங்களுக்குப் பிரிந்து செல்லாமல், அது மத்திய அரசோடு ஒட்டியிருக்கின்ற காரணத்தால், விமான தளத்திற்கு எதிரிலே மத்திய அரசுக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. எனவே அந்த இடத்தில் இவர்களை இடம் பெயர்த்து அனுப்புவதற்கு இந்த அரசு சிபாரிசு செய்யுமா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அந்த இடத்திற்கு அருகிலே சென்னை வட்டார ராணுவத தளம் இருக்கிறது. அந்த இடத்தை எடுக்கலாம் என்று சம்பந்தப்பட்ட அலுவலர்களை கலந்து ஆலோசிக்கின்ற நேரத்தில், அந்த இடத்திற்கு மிக அருகாமையில் சுடும் பயிற்சி, ' பயரிங் ரேஞ்ச் ' இருக்கின்ற காரணத்தால், அது வசிப்பதற்கு தகுதியற்ற இடம், ஆகவே, கொடுப்பது அவ்வளவு உசிதமாக இருக்காது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். எப்படி இருந்தாலும் அவர்கள் ஒரே இடத்தில் இருக்கின்ற வகையில் மாற்று ஏற்பாடு செய்து கொடுத்த பிறகுதான், குறிப்பிட்ட இடத்தை விமானத் தளத்திற்கு மாற்றிக் கொடுப்பது குறித்து அரசு முடிவு எடுக்கும்.

திருப்பூர் பனியன் தொழிலாளர்களுக்கு வீடுகள்

* 3344—திரு. சி. கோவிந்தசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருப்பூரில் உள்ள பனியன் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?